**24.03.2025 OS.No.187/2014**

பி.சா. **2** பெயர்: கிருஷ்ணமூர்த்தி த/பெ சின்னாகவுண்டர்

சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

13. மணிமேகலை 2-ம் பிரதிவாதி எனது மாமியார் என்றால் சரிதான். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 2003-ல் திருமணம் ஆனது. எங்களுக்கு ஏற்கனவே மணிமேகலை உறவினாரா என்றால் இல்லை. திருமணத்திற்கு பின்னர் தான் ஏற்பட்ட உறவு ஆகும். எனக்கு திருமணத்திற்கு முன்னர் மணிமேகலை குடும்பத்தில் நடந்த விவரங்களை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான் . அசல் 1 முதல் 6 வாதிகள் மற்றும் சிவகுமார், மணிமேகலை ஆகியோர்கள் முருக கவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்துகள் முருக கவுண்டருக்கு பரம்பரை சொத்துகள் என்றால் அதை பற்றி தெரியாது . ஆனால் முருக கவுண்டர் சொத்துகள். முருக கவுண்டர் இறக்கும் வரை அவர்தான் தாவா சொத்துகள் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். குடும்பத்தை சொத்துக்களை அவர்தான் நிருவாகம் செய்து வந்தார் என்றால் சரிதான். முருக கவுண்டர் உயிருடன் இருந்த வரை குடும்பத்தில் பாகம் பிரிவினை நடக்கவில்லை என்றால் அதை பற்றி தெரியாது. நான் எனது மாமியார் இடம் பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்பது பற்றி கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் பாகம் படியாக மணிமேகலைக்கு சொத்து கொடுத்தாக சொன்னார். பாகம் பிரிவினை நடந்தாக சொன்னார். 2-ம் பிரதிவாதி மணிமேகலை தற்போது வரை இவ்வழக்கில் ஆஜர் ஆகி பதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது எதிர் வழக்குரையில் முருக கவுண்டர் இருந்த போது பாகப்பிரினை ஏற்பட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். நான் எனது எதிர் வழக்குரையில் அவ்வாறு சொல்லவில்லை என்றும் தற்போது தவறாக பாக பிரிவினை ஏற்பட்டதாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு 2004 வருடத்தில் கிருஷ்ணகிரி சார்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்றால் தெரியாது. நான் ஆரம்பத்தில் இருந்தே இவ்வழக்கை கண்காணித்து வருகிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 77 /2A சொத்தினை மணிமேகலைக்கு அவரது தந்தை முருக கவுண்டர் எழுதி கொடுத்தற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் ஆவணம் உள்ளது. மேற்படி ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லுவது போன்று சீதனமாக கொடுத்தாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறிகிறேன் என்றால் சரியல்ல. நான் 14.01.2011 தேதியில் மணிமேகலையிடம் இருந்து 14-ம்அயிட்ட சொத்தில் பகுதியில் கிரையம் பெற்று உள்ளேன் என்றால் சரிதான். வழக்கு நிலைவையில் இருந்து போது கிரையம் பெற்று உள்ளேன் என்றால் வழக்கு பற்றிய விவரம் எனக்கு 2014 வருடத்தில் தான் தெரியும். எனது கிரைய ஆவணங்கள் இரண்டு வழக்கு தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என்றால் சரியல்ல. நான் 4-ம் வாதி பழனியமாளில் இருந்து 09.10.2003 கிரைய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் ஏமாற்றி வாங்கியது என்றால் சரியல்ல. எனது கிரைய ஆவணங்கள் வாதியை எவ்விதத்திலும் கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. 14 அயிட்ட சொத்தானது நீதிமன்ற உத்தரவு படியாகதான் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்தை சேர்க்க நீதிமன்றம் உத்தரவு இட்டது தவறு என்பதாக மேல் முறையீடு எதுவும் செய்யப்பட்டு உள்ளதா என்றால் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் ரெட்டு மனு தாக்கல் செய்து மனு தள்ளுபடி ஆகிவிட்டது. நான் அதற்கு எதிராக மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தேனா என்றால் இல்லை. சர்வே எண். 77 /2A சொத்து முருக கவுண்டர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மேற்படி சொத்து பாகம் பிரிக்கப்பட வேண்டிய சொத்து என்றால் சரியல்ல. நான் மற்ற பாகஸ்தர்களை ஏமாற்றும் நோக்கில் எனது கிரைய ஆவணங்களை ஏற்படுத்தி உள்ளேன் என்றால் சரியல்ல. எனது கிரைய

ஆவணங்கள் படியாக உரிமை மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்து உள்ள கணினி பட்டா ஆவணங்கள் முறையான விசாரணை செய்யப்படாமல் வழங்கப்பட்டு உள்ளதால் மேற்படி ஆவணங்கள் சட்டப்படியாக ஏற்புடைய ஆவணங்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. சிவக்குமார் வழக்கு நிலுவையில் இருந்த போது தான் தாவா சொத்தில் பகுதியை விற்பனை செய்து உள்ளார் என்றும் மேற்படி பாக பிரிவினைக்கு உட்பட்ட சொத்து என்றும் இவ்வழக்கு தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

மறுவிசாரணை: இல்லை.

ஓம்/- திரு. முஹம்மது அலி, பி.எஸ்.சி. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.